செ.வெ.எண்: 13/ஜூலை நாள் : 06.07.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் மற்றும் மதுரை மண்டலத்தில் உள்ள தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்களில் காலியாகவுள்ள மருத்துவமனைப் பணியாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மதுரை மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் (தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டம்) அலுவலகம் கட்டுப்பாட்டில் உள்ள இராமநாதபுரம் மற்றும் மதுரை மண்டலத்தில் உள்ள தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்களில் காலியாகவுள்ள மருத்துவமனைப் பணியாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கல்வித் தகுதி : தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் (BC / MBC / DNC) 18 முதல் 32 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் (SC / ST) 18 முதல் 35 வயதிற்குட்பட்டவராகவும், இதர பிரிவினர் 18 முதல் 30 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பத்தினை ஜூலை 20-ஆம் தேதிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்கள் மட்டும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **20.07.2016**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :**

மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்
மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகம் (தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டம்)
கே.கே.நகர், சட்ட கல்லூரி எதிர்புறம்
மதுரை - 20
தொலைபேசி எண் : 0452 -2529351

மேற்கண்ட தகவலை மதுரை மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்(தொ.அ.ஈ.தி) அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**